பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 26 வியாழக்கிழமை 10.06.2021 கதிர் 217

**இனி இது ரகசியம் அல்ல!**

யாழ்.மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணி வி.மணிவண்ணன் சபையின் கடைசி ஆண்டுப் பதவிக் காலத்தில்தான் மேயராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்தச் சபையின் ஆரம்ப காலத்தில் 26 மாதங்கள் சபை நடவடிக்கைகளில்

பக்கம்02

## ஜப்பானிலிருந்து இலங்கைக்கு ஆறு இலட்சம் 'அஸ்ட்ராசெனிகா'

### கோட்டாபயவுடனான சந்திப்பில் தூதுவர் இணக்கம்



ஆறு இலட்சம் 'அஸ்ட்ரா செனிகா' தடுப்பூசிகளைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ, ஜப்பான் பிரதமர் யொசிஹிடே சுகாவிடம் முன்வைத்த கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் சுகியாமா அக்கிராவுக்கும் இடையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இது பற்றி தெரிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றொழிப்பு, மருத்துவ மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களைப்

2

## பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் உயிரிழந்த நபரின் வீட்டில் கூட்டமைப்பினர்

### குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பு

கொரோனாச் சட்டத்தை மீறிய குற்றத்தில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்து பரபரப்பை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் உயிரிழந்த நபரின் பாணந்துறை வீட்டுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன்,

2



# 22 ரணில் நாடாளுமன்றம் பிரவேசம்; 21 சஜித் தலைமையில் அவசர பேச்சு

### கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றத்துக்குப் பிரவேசம் செய்யவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், 21ஆம் திகதி சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட இருக்கின்றது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

2

## 2,735 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 735 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 13 ஆயிரத்து 396 ஆக அதிகரித்துள்ளது.

வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை

2

## யாழ்.மேயரின் வர்த்தமானி அறிவித்தலில் சட்டத் தவறு; திருத்தி வெளியிட உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் மாநகர சபை நடவடிக்கைகள் தொடர்பில் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பெயரில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் அரச சட்ட வரம்பை மீறியதனால் அதைத் திருத்தி மீள் பிரசுரம் செய்யுமாறு உள்ளூராட்சி ஆணையாளர் எழுத்தில் அறிவித்துள்ளார்.

மாநகரத்தின் நடவடிக்கைகளிற்கான கட்டண அறவீடுகள் மற்றும் குற்றப் பணங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் இந்த ஆண்டு மார்ச் மாதம் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் விடுக்கப்பட்ட

2

## யாழ்.குடாநாட்டில் 108 பேர் உட்பட வடக்கில் 143 பேருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த 108 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 143 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகம், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்

2

## கொரோனா நோயாளிகளை ஏற்றிவந்த பஸ் மோதி வயோதிபர் பரிதாப மரணம்!

மட்டுவிலில் நேற்று மாலை பதற்றம்; பஸ் மீது கல் வீச்சு; ஐந்து பேர் கைது



2

## புதிய பல்கலைக்கழகமாக வவுனியா வளாகம் அறிவிப்பு

### கல்வி அமைச்சு விசேட வர்த்தமானி

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தைப் புதிய பல்கலைக்கழகமாக அறிவித்து கல்வி அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக சட்டங்களுக்கமைவாக 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் கையெழுத்துடன் இந்த வர்த்தமானி வெளியாகியுள்ளது.

இலங்கை, வவுனியா பல்கலைக்கழகம் என்ற பெயரில் புதிய

2

## பல்கலை அனுமதிக்கான விண்ணப்ப காலம் நீடிப்பு

2020 - 2021ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நாளை 11ஆம் திகதி நிறைவடையவிருந்த நிலையில், இக்காலப்பகுதியை நீடிப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 18ஆம் திகதி வரை குறித்த விண்ணப்பக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையையும் கொரோனா நிலைமையையும் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## Education Page

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com
076 443 8622

**இன்றைய காலைக்கதிர் இதழில் தரம் - 08 இற்கான விஞ்ஞானப் பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப் பட்டுள்ளது.**

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவரால் பங்குபற்ற முடியவில்லை – சட்டச் சிக்கல் காரணமாக.

ஏதோ ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் எம்.பியின் அருட் பார்வைக் கடாட்சத்தினால் அவரால் சபைக்கு மீண்டு வரவும், மேயர் பதவியைக் கைப்பற்றவும் முடிந்தது.

அவர் சபைக்கு வராத – வர முடியாமல் இருந்த – காலத்துக்கான கொடுப்பனவு என்ற பெயரில் 6 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவுக்கு கொடுப்பனவுச் சிட்டை தயாரிக்கப்பட்டது. ஆனால் அது வெட்டிக் கொத்தி கடைசியாக 4 லட்சத்து 34 ஆயிரம் ரூபாவே அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த சோகக் கதை பற்றிய தகவல் இது.

2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ் மாநகர சபை உறுப்பினராக வி. மணிவண்ணன் தேர்வானபோதும் சபை எல்லைப் பரப்பிற்குள் வதிவிடத்தை அவர் கொண்டிருக்கவில்லை என சபை எல்லைக்குள் வசிக்கும் வாக்காளர் ஒருவர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையில் சபை அமர்வில் பங்குகொள்ள அவருக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டு சட்டத்தரணி சுமந்திரன் தமது வழக்காளி சார்பில் வழக்கை வாங்கியதனால் மணிவண்ணன் மீண்டும் சபைக்கு வரமுடிந்தது. தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா தரப்பின் அரசியல் விவேகமற்ற – முட்டாள்தனமான – அரசியல் காய் நகர்த்தலினால் மணிவண்ணனுக்கு மேயராகும் அதிர்ஷ்டமும் கிட்டியது.

நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவினால் சபை நடவடிக்கையில் பங்குகொள்ளாத காலத்திற்கான – மாநகரசபை உறுப்பினருக்குரிய – கொடுப்பனவும் இடைநிறுத்தப்பட்டது. அவர் சபைக்கு மீண்டுவிட்டமையால் இவ்வாறு இடை நிறுத்தப்பட்ட காலத்திற்கான தனது கொடுப்பனவை வழங்குமாறு கோரி முதல்வர் வி.மணிவண்ணன் சபைக்கு விண்ணப்பித்தார். இந்த விண்ணப்பம் ஆணையாளரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டதற்கமைய மணிவண்ணன் சபைக்கு வராத காலத்து கொடுப்பனவை வழங்க ஆணையாளர் அனுமதி வழங்கியிருந்தார்.

இதன் அடிப்படையில் 26 மாத காலத்திற்கான மாதக் கொடுப்பனவு மற்றும் சபையினால் வழங்கப்படும் தொலைபேசிக் கட்டண அலவன்ஸ் உட்பட மொத்தம் 6 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவிற்கு கொடுப்பனவுச் சிட்டை தயாரிக்கப்பட்டது.

அந்தக் கொடுப்பனவுச் சிட்டை நிதிப் பிரிவிற்கு சென்றதன் பின்பு உள்ளூராட்சி ஆணையாளரின் தகவலின் பெயரில் முதல்வர் மணிவண்ணன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட காலத்திற்கான சகல கொடுப்பனவையும் நிறுத்துமாறு பணிக்கப்பட்டது.

இதனால் 5 மாத கால கொடுப்பனவான ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா நீக்கப்பட்டு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்கு கொடுப்பனவுச் சிட்டை மீண்டும் தயாரிக்கப்பட்டு நிதிப் பிரிவிற்கு அனுப்பப்பட்டது.

இருந்தபோதும் சபையின் உறுப்பினராகச் செயற்படாத காலத்துக்கு தொலைபேசி அலவன்ஸ் கொடுப்பனவான மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பில் தொடர்ந்தும் சர்ச்சை இருப்பதனால் அந்தக் கொடுப்பனவுத் தொகையான ஒரு லட்சத்து 26 ஆயிரம் ரூபாவும் கழிக்கப்பட்டது.

இவற்றின் பின்பு நேற்றைய தினம் 4 லட்சத்து 34 ஆயிரம் ரூபா மணிவண்ணனின் வங்கி கணக்கிற்கு காசோலையாக யாழ். மாநகரசபையால் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

பாவம் மணிவண்ணன். இரண்டரை லட்சம் ரூபாவை சுளையாக வெட்டிவிட்டார்கள்.

– மின்னல் –

## ஜப்பானிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெற்றுக்கொள்வது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைக்கு ஜப்பான் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

சமுத்திர அனர்த்தம் தொடர்பில் விரைவாகப் பதிலளிப்பதற்குத் தேவையான தொழிநுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் ஜனாதிபதி, ஜப்பான் தூதுவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

## யாழ்.மேயரின் வர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கட்டுப்பாடுகள், தண்டங்களை விதித்து நடைமுறைப்படுத்தும் பெயரிலேயே காவல் அணி ஒன்றை அவர் உருவாக்கினார் என்பதும், அது பின்னர் பெரும் சர்ச்சையில் முடிந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் அவர் குறிப்பிடும் விடயங்களை மாநகர சபை கட்டளைச் சட்டம் 286ஏ உடன் சேர்த்து வாசிக்குமாறு அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் 286ஏ சரத்தில் உள்ள அதிகாரம் மாநகர மேயருக்கு உள்ளது அல்ல. மக்களால் தேர்வு செய்யப்பட்ட சபை இல்லாத காலத்தில் நியமிக்கப்படும் விசேட ஆணையாளரிற்கு வழங்கப்பட்ட அதிகாரம் பற்றியதே அது.

மாநகர முதல்வருக்கு உரிய அதிகார வரம்புகள் தனியான கட்டளைச் சட்ட இலக்கத்தில் உள்ளபோதும் இந்த வர்த்தமானி அறிவித்தல் தவறாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது என கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் ஒருவர் மே மாதம் 20ஆம் திகதி எழுத்தில் உள்ளூராட்சி ஆணையாளரிடம் முறையிட்டிருந்தார்.

விசேட ஆணையாளரின் அதிகாரத்தை மேயர் தன்னுடைய அதிகாரமாகப் பாவிக்க முடியாது. தனக்கு அதிகாரமளிக்கப்பட்ட பிரிவுகளைச் சுட்டி அவற்றின் கீழேயே வர்த்தமானி அறிவித்தலை மேயர் விடுக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டமைப்பு உறுப்பினரின் முறைப்பாடு பரிசீலிக்கப்பட்டதில் வர்த்தமானி அறிவித்தல் தவறு எனக் கண்டறியப்பட்டது. அதற்கு அமைய முதல்வரால் மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியை சீர் செய்து மீண்டும் வெளியிடுமாறும், இந்த வர்த்தமானி தவறானது எனவும் நேற்றைய தினம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் எழுத்தில் யாழ். மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணியான மாநகர முதல்வரே சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானி வெளியிடவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

## பொலிஸாரால் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இரா.சாணக்கியன் ஆகியோர் நேற்று விஜயம் செய்தனர்.

கொழும்பிலிருந்து விஜயம் செய்த மேற்படி எம்.பிக்கள், உயிரிழந்த நபரின் மனைவி மற்றும் உறவினர்களுடன் பிரதேச மக்களையும் சந்தித்து ஆறுதல் கூறியதுடன் சம்பவம் தொடர்பாகவும் கேட்டறிந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் இருவர் உடனடியாகப் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், இதேபோன்றதொரு மற்றுமொரு சம்பவம் மட்டக்களப்புப் பகுதியிலும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது

## 2, 735 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 125 உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 427 ஆக உயர்வடைந்துள்ளது.

# வாயில் வாளுடன் 'ரிக் ரொக்' செய்தவர் கோப்பாய் பொலிஸாரிடம் சிக்கினார்!

வாயில் வாள் ஒன்றை வைத்து 'ரிக் ரொக்' காணொலி செய்து சமூக ஊடகங்களில் பதிவிட்ட இளைஞரை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

உரும்பிராய், சிவகுல வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே நேற்று கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

## 22 ரணில் நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தினூடாக அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்ற தகவல் உறுதி செய்யப்பட்ட நாளில் இருந்து கொழும்பு அரசியல் பரபரப்பாகியுள்ளது.

ஆளும் கட்சி சந்தித்து வரும் உள்ளக – வெளியக நெருக்குவாரங்கள், அதனால் பௌத்த பேரினவாதிகள் தரப்பு மற்றும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அரசு தொடர்பான அதிருப்தி அத்துடன் எதிர்க் கட்சிக்குள் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் கருத்து முரண்பாடுகள் என்பவற்றை அடிப்படையாக க் கொண்டு ரணிலின் மீள் பிரவேசம் முக்கியம் பெறத் தொடங்கியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் வரும்போது அவர்தான் எதிர்க்கட்சித் தலைவர் என்ற கருத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்த கருத்து அரசியல் அரங்கை மேலும் சூடாக்கியுள்ளது.

இந்தப் பின்னணியில்தான் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கொரோனா சிகிச்சை நிறைவு செய்யும் அதே நாளில் எதிர்வரும் ஜூன் 21 அன்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை அவசரமாகக் கூட்ட ஏற்பாடு செய்திருக்கின்றார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்போது நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது என அந்தத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த திங்கட்கிழமை அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் கூடினர். இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ காணொலி தொழில்நுட்பம் ஊடாக கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவு வழங்கி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தனர். இதனையடுத்து அந்த விடயம் அரசியலில் பேசும் பொருளாக மாறியது.

கட்சியினுள் காணப்படும் நெருக்கடி நிலையால் இவ்வாறு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது எனச் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இவ்வாறான பின்னணியில் எதிர்வரும் 22ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அந்தக் கட்சிக்கு கிடைத்துள்ள தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார் என்று கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கு முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக் கூட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் மீள் பிரவேசம் கொழும்பு அரசியலைப் பெரும் பரபரப்பாக மாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா நோயாளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ்.தென்மராட்சி, மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு அண்மையாக சைக்கிளில் பயணித்த வயோதிபர் ஒருவரை கொரோனா நோய்த் தொற்றாளர்களை ஏற்றி வந்த பஸ் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

விவசாயி ஒருவரே உயிரிழந்த நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் குறித்த பஸ் மீது கற்கள் எறியப்பட்டன. அதனால் பஸ்ஸுக்குப் பாதுகாப்புக்குப் பயணித்த இராணுவம் கற்கள் எறிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டதால் குழப்பநிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணி யளவில் இடம்பெற்றது.

மட்டுவிலைச் சேர்ந்த வேலாயுதம் (வயது – 70) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவருவதாவது,

தென்னிலங்கையிலிருந்து 5 பஸ்களில் கொரோனா நோய்த்தொற்றாளர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு அண்மையாகச் சைக்கிளில் பயணித்த விவசாயி ஒருவரை பஸ் ஒன்று மோதியதில் அவர் வீதியில் சாய்ந்தார்.

சுயநினைவற்ற அவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் பஸ்களுக்கு கற்கள் எறியப்பட்டன. வயோதிபரை மோதிய பஸ்ஸின் முன் கண்ணாடி உடைந்தது. அதனால் பஸ்களில் பாதுகாப்புக்காகப் பயணித்த இராணுவத்தினர் கற்கள் வீசியோர் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டனர்.

மேலும், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டனர். கற்கள் எறிந்தனர் என்ற குற்றச்சாட்டில் சிலரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

சம்பவத்தையடுத்து விபத்துக்குள்ளான பஸ் தவிர்ந்த ஏனைய 4 பஸ்களும் அங்கிருந்து அனுப்பப்பட்டன

## யாழ்.குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 44 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 99 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## புதிய பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பல்கலைக்கழகம் அழைக்கப்படும் என்றும், இதன்படி யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் ஜூலை 31 ஆம் திகதியுடன் இல்லாமல் செய்யப்படும் என்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய வவுனியா பல்கலைக்கழகம் வியாபார கற்கைகள், பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் கற்கைகள் ஆகிய பீடங்களை கொண்டிருக்கும் என்றும் கல்வி அமைச்சர் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளார்.

# இணைய இணைப்பை இலவசமாக மாணவர்களுக்கு வழங்குங்கள்!

## நாடாளுமன்றில் சாணக்கியன் வலியுறுத்து

பாடசாலை மாணவர்களுக்கு இணைய இணைப்புகளை இலவசமாக வழங்குங்கள் என அரசாங்கத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

வீடொன்றில் ஒரு தொலைபேசி மாத்திரமே உள்ளது. ஆனால் அந்த வீட்டில் உள்ள இரண்டு பிள்ளைகள் சூம் ஊடாக கற்கவேண்டி வந்தால் அது மிகவும் கஷ்டமாகும்.

நாங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்து கொண்டு யோசனை ஒன்றை முன்வைக்க முடியும். பதிவு செய்யப்பட்ட காணொலிகளை யூடியுப் இல் பதிவேற்றம் செய்யுங்கள்.

அவர்கள் கல்வி கற்கின்ற பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் கற்பிக்கின்ற காணொலிகளை யூடியுப் இல் பதிவேற்றம் செய்தால், அதேபோன்று இணைய இணைப்புகளை இலவசமாக வழங்க முடியும் என்றால் அது மாணவர்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.' எனக் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, 'உங்களுடைய யோசனை குறித்து நாங்கள் ரி.ஆர்.சி, ஐ.சி.ரி. உடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம்.

சூம் போன்று ஐ.சி.ரி. இனால் உருவாக்கப்பட்டுள்ள செயலி ஒன்று உள்ளது. இதற்கு ரி. ஆர்.சி. ஊடாக இணைய கட்டணம் இன்றி மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்க முடியுமா என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

இன்னும் ஒரு சில தினங்களில் அதுகுறித்த முழுமையான விடயங்களை வழங்க முடியும். சூம் செயலி இன்றி மாணவர்கள் இலவசமாகக் கல்வி கற்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.' - எனக் குறிப்பிட்டார்.



இதற்கு நன்றி தெரிவித்த இரா.சாணக்கியன், பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மரக்கறி செய்கையாளர்கள் தொடர்பிலும் கருத்து வெளியிட்டார், 'நுவரெலியா உள்ளிட்ட பகுதிகளில் உள்ளவர்கள் தொடர்பை ஏற்படுத்தி ஏதாவது செய்து தர முடியுமா என கேட்கின்றனர்.

எங்களால் முடிந்தது இங்கே வந்து அவர்களுக்காக பேசமுடிந்தது மாத்திரமே.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தனிமைப்படுத்தல் மீறிய 1,034 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறும் வகையில் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 24 மணிநேரத்தில் ஆயிரத்து 34 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

சரியான முறையில் முகக்கவசம் அணியாமை மற்றும் மாகாண எல்லைகளைக் கடக்க முயன்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் இதுவரை 26 ஆயிரத்து 920 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




## மெனிக்பாம் பகுதியில் 5ஆயிரம் ரூபா உரிய முறையில் வழங்கப்படவில்லை

### மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா - செட்டிகுளம் - மெனிக்பாம் பகுதியில் சமுர்த்தி கொடுப்பனவும், 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை எனவும், மூன்று நாள்களாகியும் இதுவரை அநேகமானவர்களுக்கு குறித்த கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் மெனிக்பாம் கிராம மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி மக்கள் உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளச் சென்றபோது பணம் வழங்க வந்த சமுர்த்தி உத்தியோகத்தர் சமுர்த்தி உள்ளவர்களுக்கு மட்டும்தான் பணம் வழங்குவோம் என்றும், ஏனையோருக்கு பணம் வழங்க முடியாது என்றும், தேவையெனில் பிரதேச செயலகத்தில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும், இங்கு தர முடியாது எனவும் கூறி மக்களை திருப்பி அனுப்பியுள்ளார்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மக்கள் பொதுநோக்கு மண்டபத்தில் உதவித் தொகையைப் பெறுவதற்கு காத்திருந்த வேளையிலும் எவரும் அங்கு வராமையால் ஏமாற்றத்துடன் குறித்த கிராம மக்கள் திரும்பிச்சென்றுள்ளனர்.

அத்தோடு கொடுப்பனவை வழங்குமாறு மக்கள் குறித்த கிராமத்தினுடைய சமுர்த்தி உத்தியோகத்தரை கேட்ட போது பொலிஸாரிடம் பிடித்துக் கொடுப்போம் என அச்சுறுத்தினார் எனவும், இந்தக் கிராமத்தில் கொடுப்பனவு முறைகேடான முறையில் வழங்கப்படுவதாகவும், உரிய முறையிலே வறுமை கோட்டிற்கு கீழ் வாழுகின்ற மக்களுக்கு இந்த பணம் சரியான முறையிலே செல்லவில்லை என்றும் மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஒழுங்கமைப்பில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி





சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரின் ஒழுங்கமைப்பில் யாழ்.எய்ட் நிறுவனத்தினரின் நெறிப்படுத்தலில் அமரர் கந்தையா செல்வராஜா நினைவாக கனடா வாழ் கதிரவேற்பிள்ளை குடும்பத்தினரின் அனுசரணையில் கொவிட் பயணத்தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த 100 பேருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் பா.மரியதாஸின் ஒழுங்கமைப்பில் இளவாலையில் உள்ள யாழ். எய்ட் நிறுவனத்தின் பண்ணையில் வைத்து இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கடந்த திங்கள், செவ்வாய், புதன் என்று மூன்று பிரிவாக மக்களை சுகாதார நடைமுறைக்கமைவாக ஒன்றிணைக்காமல் 1,600 ரூபா பெறுமதியிலான பொதிகள் 100 குடும்பங்களுக்கு வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உனக்கில்லையடி உபதேசம்

**கொவிட் தொற்றுப் பரவல் நெருக்கடியால் நாடு முடக்கத்தில் கிடக்கின்றது. மக்களின் அன்றாட வாழ்வியல் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரம் படுத்துவிட்டது. எல்லா வீடுகளிலும் நெருக்கடி.**

**பொருளாதாரம் படுத்து, நாடு சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளமையால் அந்நிய செலாவணி வற்றிவிட்டது, அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்கே நிதி இல்லை என்ற நிலைமை எனக் கூறப்பட்டது.**

**அதனால், உளுந்து, மஞ்சல் போன்றவற்றைக் கூட இறக்குமதி செய்யப் பணம் இல்லை என்றார்கள்.**

**ஆனால் சீனி இறக்குமதிக்கான வரியைத் திடீரென ஒரேயடியாக வெட்டினார்கள். எனினும் சந்தையில் சீனியின் விலையைக் குறைக்கவேயில்லை. இதனால் மிஞ்சிய சுமார் ஆயிரத்து நானூறு கோடி ரூபாவை இடைத் தரகர் சூறையாடி சேர்க்க வேண்டிய தரப்பிடம் சேர்த்து விட்டனர் எனத் தகவல்.**

**இந்தச் சீத்துவத்தில்தான், இந்த நெருக்கடி சமயத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 370 கோடி ரூபா செலவில் வரிவிலக்களிக்கப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானித்து நடவடிக்கை எடுத்திருக்கின்றது.**

**இந்த நடவடிக்கைக்கு எதிராகத் தெற்கில் சமூக ஊடகங்களில் காட்டமான கருத்துகள் முன்வைக்கப்பட்டு எதிர்ப்புணர்வு பெரியளவில் கிளம்பியதும், சேதத் தவிர்ப்பு நடவடிக்கை அரசினால் முன்னெடுக்கப்பட்டது.**

**நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வரிவிலக்கற்ற வாகனங்களை வழங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் ரத்துச் செய்யப்படுவதாக பிரதமர் அறிவித்தார்.**

**பிரதமர் அப்படி அறிவித்தாலும், வாகன இறக்குமதி நடவடிக்கை திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படும் என்று சில தரப்புகளினால் கூறப்பட்டது. அதனால் இந்த விடயத்தில் – பிரதமரின் அறிவிப்பில் – மக்களுக்கு சந்தேகம் நீடிக்கவே செய்தது.**

**அந்தச் சந்தேகம் சரியானதே என்பது இப்போது அம்பலமாகி வருகின்றது.**

**ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கான வாகனங்கள் உட்பட 399 வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான 'லெட்டர் ஒவ் கிரடிட்' எனும் கடனிறுத்தல் கடிதங்கள் அரச வங்கிகள் மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு விட்டன.**

**"இது முத்தரப்பு விடயம். உற்பத்தி நிறுவனம், வங்கி மற்றும் கொள்வனவு செய்யும் அரசு ஆகிய மூன்று தரப்பினரிடையேயான உடன்பாடு இதில் சம்பந்தப்பட்டுள்ளது. அதிலிருந்து ஒரு தலைப்பட்சமாக அரசு மட்டும் தன்பாட்டில் இலகுவாக விலகி விட முடியாது" – என்று அரசுத் தரப்பில் அதன் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல நியாயம் பிளக்கின்றார்.**

**கொவிட் தொற்று ஆரம்பத்தின் போதும் – கடந்த வருடத்தில் முதல் தொற்றுப் பரவுகைக் காலத்திலும் – இப்படி அந்நிய செலாவணியைக் சேமிப்பதற்காக வாகன இறக்குமதி தடை செய்யப்பட்டதாக அரசு அறிவித்தது.**

**ஆனால் இப்போது மேற்கொள்ளப்பட்ட ஊடகப் புலனாய்வுகள் அந்தக் காலகட்டத்திலும் சத்தம் சந்தடியின்றி – வெளியே ஆர்ப்பாட்டம் பண்ணாமல் – முந்நூறு சொகுசு வாகனங்கள் வரை இறக்குமதிசெய்யப்பட்டனஎன்றஉண்மையைஅம்பலப்படுத்தியுள்ளன.**

**இத்தகைய அதியுச்ச விலை கொண்ட முந்நூறு வாகனங்கள் அக்கால கட்டத்தில் – அரசின் தடை அறிவிப்புக்கு மத்தியிலும் – இறக்குமதி செய்யப்பட்டிருப்பதை சுங்கத் திணைக்கள வட்டாரங்களும் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இந்த முந்நூறு வரையான வாகனங்களுக்கு அப்போது, அரச அனுமதியுடன் 'லெட்டர் ஒவ் கிரடிட்' வங்கிகள் ஊடாகத் திறந்து, அதன் மூலம் அவை இறக்குமதி செய்ய இடமளிக்கப்பட்டது என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.**

**அப்படியாயின், இப்படியான விதிமுறைகள் தொடர்பான அரசின் அறிவிப்பு கண்துடைப்புத்தானா என்று கேள்வி எழுகின்றது.**

**மக்களுக்கு அன்றாட அத்தியாவசியப் பொருளான உழுந்தை இறக்குமதி செய்ய விடாது தடுத்து, அதற்காக உள்ளூரில் மக்கள் அதற்கு கொள்ளை விலை கொடுக்க, அதனை இறக்குமதி செய்வதற்கு இல்லாத அந்நிய செலாவணி அரசுக்குத் தேவையானோருக்கு – ஆட்சியாளர்களுக்கு – சொகுசு வாகனக் கொள்வனவு மட்டும் கிட்டுகின்றது. அது எங்ஙனம்?**

**கொவிட் தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பொதுமக்களுக்கு மட்டும்தானா? ஆட்சியாளர்களுக்கு இல்லையா?**

**அவர்கள் கூறும் உபதேசங்கள், அவர்கள் விதிக்கும் நெருக்கடிக் கட்டுப்பாடுகள் எல்லாம், 'ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி' என்ற வகையறாவைச் சேர்ந்தவைதானா?**

**இப்போதைய வாகன இறக்குமதி விவகாரத்திலும் ஒரு சின்ன சுத்துமாத்து உள்ளது. இந்த வாகனங்கள் நேரடியாக உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படவில்லை. சிங்கப்பூரில் உள்ள ஓர் இடைத்தரகர் நிறுவனம் மூலம்தான் விடயம் முன்னெடுக்கப்படுகின்றது. உள்ளே புதைந்துள்ள சூக்குமம் ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.**

# வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் தடுப்பூசி திட்டம் விரைவுபடுத்தப்படவேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தல்



கொரோனாத்தடுப்பூசிவழங்கும்வேலைத் திட்டம் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரைவுபடுத்த வேண் டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போதே, கடற்றொழில் அமைச்சரால் இந்த விடயம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே, 50 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டமாக குறைந்தது ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் தடுப்பூசிகளாவது அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்.

அதேபோன்று, வவுனியா மாவட்டத்திற்கு குறைந்தது ஒரு லட்சம் தடுப்பூசிகளையும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு குறைந்தது தலா 50 ஆயிரம் தடுப்பூசிகளையாவது விரைவாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது, கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, கிடைக்கின்ற தடுப்பூசிகள் அனைத்து மாவட்டங்களுக்கும் பாதிப்புக்களின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்ற நிலையில், ஏற்கனவே அமைச்சரவையில் உறுதியளிக்கப்பட்டது போன்று யாழ்ப்பாணத்துக்கான இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும், வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதன் அவசியத்தினைப் புரிந்து கொள்வதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, விரைவில் அதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கசிப்பு உற்பத்தி செய்தவர் மானிப்பாயில் வைத்து கைது

சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவரை யாழ்.மாவட்ட புலனாய்வு பிரிவுக்குக் கிடத்த தகவலின் அடிப்படையில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலில் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மானிப்பாய் சங்கானை சேச் வீதியில் சட்ட விரோதமாக கசிப்பு காச்சி விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை 15 லீற்றர் உடன் மற்றும் கசிப்பு வடிப்பதற்கு பயன்படுத்தும் உபகரண பொருள்களுடன் வைத்து கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் வயது 40. இவர் மேலதிக விசாரணைக்காக மாவட்ட குற்றதடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

## ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் உள்ளடங்களாக 74 பேருக்கு வவுனியா வடக்கில் பி.சி.ஆர். பரிசோதனை

ஆடைத்தொழிற்சாலைக்கு செல்லும் பஸ்கள் மற்றும் வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு வவுனியா வடக்கு புளியங்குளம் பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது. நேற்று (புதன் கிழமை) காலை வவுனியா வடக்கு புளியங்குளம் பகுதியில் வைத்து ஆடைத்தொழிற்சாலைக்கு பஸ்ஸில் பயணித்த ஊழியர்கள், புளியங்குளம்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் தங்கி இருந்தவர்களுக்கே இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆடைத்தொழிற்சாலைக்கு பஸ்ஸில் செல்பவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பயணிக்கிறார்களா? வர்த்தக நிலையங்களில்சுகாதாரநடைமுறைகளைப் பேணுகின்றார்களா? என்பதையும் அவதானித்திருந்ததோடு ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள், வர்த்தக நிலையத்தில் தங்கி இருந்தோர் என 74 பேருக்கு பி.சி.ஆர். மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பரிசோதனை வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வி. திலீபன் தலைமையில் சுகாதா ரப் பரிசோதகர்களான க. மேஜெயா, எஸ். நிசாந்தன், எஸ். சாருஜன் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டிருந்த மையும் குறிப்பிடத்தக்கது.

## மீன் ஏற்றுமதியாளர்கள் போல் சூட்சுமமாக மறைத்து எடுத்து சென்ற நான்கு கிலோ கஞ்சாவுடன் கைது!

மீன் ஏற்றுமதியாளர்கள் போல் சூட்சுமமாக மறைத்து எடுத்து சென்ற நான்கு கிலோ கஞ்சாவுடன் விசேட அதிரடிப்படையினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

யாழிலிருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த மீன் வர்த்தக வாகனத்தில் இவ்வாறு கஞ்சா பொதி எடுத்து செல்லப்படுவது தொடர்பில் கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக சோதனை மேற்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் நோக்கி பயணித்த குறித்த வாகனத்தை ஆனையிறவு சோதனைச் சாவடியில் விசேட அதிரடிப்படையினர் சோதனைக்குட்படுத்தினர். இதன்போது சூட்சுமமாக மறைத்து எடுத்து செல்லப்பட்ட 4200 கிராம் எடை கொண்ட கஞ்சா பொதியை மீட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வாகன சாரதி மற்றும் உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்., வாகனத்துடன் கைது செய்யப்பட்ட நபர்கள் கிளிநொச்சி பொலிஸ்நிலையத்தில்விசேடஅதிரடிப்படையினரால் கையளிக்கப்பட்டனர்.

## காட்டுப்பன்றி என நினைத்து இளைஞன் சுட்டுக் கொலை

மாத்தளை – இரத்தோட்டை பொல்வத்த பிரதேசத்திலுள்ள மிளகுத் தோட்ட மொன்றுக்குள் சட்டவிரோதமாக நுழைந்த இளைஞர் ஒருவர், தோட்ட உரிமையாளரால் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில்பொல்வத்தபிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதான கயான் ஜயவர்தன என்ற இளைஞரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

காட்டுப்பன்றியே தனது மிளகுத் தோட்டத்துக்குள் நுழைந்து விட்டதாக நினைத்தே தாம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் எனத் தோட்ட உரிமையாளர் தெரிவித்துள்ளமையுடன், துப்பாக்கியுடன் இரத்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஆஜரானமையையடுத்து, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

தொகுப்பு - P.S.V.தினேஷ் B.A(Hons) Geography Special., M.Phil in Geography.

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....

அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.

தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

## 16ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**151.** வாழ்நாளில் ஒரே ஒரு முட்டை இடும் பறவை எது?
**152.** கற்பகதரு என அழைக்கப்படும் மரம் எது?
**153.** தேசிய போசாக்கு தினம் எப்போது?
**154.** 05ஆவது ஆண்டு நிறைவு விழா எவ்வாறு அழைக்கப்படும்?
**155.** திரவ வடிவில் உள்ள ஒரே ஒரு உலோகம் எது?
**156.** ஒரு பவுண் என்பது எத்தனை கிராம்?
**157.** இலங்கையின் அதி உயர்ந்த மலை எது?
**158.** இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது?
**159.** முதல் எழுத்துக்கள் எத்தனை?
**160.** தங்கத்தாத்தா என அழைக்கப்படுபவர் யார்?

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ...........................

## 14ஆவது போட்டிக்குரிய பதில்கள்

131) 22
132) பலமும் தியாகமும்
133) 2014
134) அமெரிக்கா
135) செப்ரெம்பர் - 08
136) நிதியமைச்சர், இலங்கை மத்திய வங்கி ஆளுநர்
137) 05
138) எறும்பு (Branto Squish)
139) ஈசல்
140) முதலாம் விமலதர்மசூரியன்

## போட்டியில் பங்குபற்றுவோருக்கான அறிவிப்பு -

நாளாந்தம் வெளிவரும் பொது அறிவுப் போட்டியில் அதிகமானவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

கேடகப்படும் கேள்விகளுக்கு விடைகளை அனுப்புவது மட்டுமல்லாது உங்களுடைய விவரங்களை யும் தவறாது அனுப்பி வைக்கவும்.

# யானை தாக்குதலுக்கு இலக்காக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

*நேற்று இரவு தனது வயல்காவலுக்குச் சென்ற பொன்னுத்துரை கௌரிதரன் என்ற 52 வயது 4 பிள்ளைகளின் தந்தை ஒருவர் யானை தாக்குதலுக்கு இலக்காக்கி உயிரிழந்துள்ளார்.*

*அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை பிரச்சினை அதிகரித்துள்ள நிலையில் பல உயிர் இழப்புகளும் சம்பவித்த வண்ணமே உள்ளன .*

*இறந்தவரது சடலம் செங்கலடி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொள்ளுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# பாலியல் தொழிலுக்கு இணையவழியில் 16 வயது சிறுமி கொழும்பில் விற்பனை

16 வயது சிறுமி இணையம் வழியாக பாலியல் தொழிலுக்கு விற்பனை செய்த ஒருவரை கைது செய்துள்ளனர் எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் பல வாடிக்கையாளர்களுக்கு குறித்த சிறுமியை விற்பனை செய்துள்ளார் என பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

குறித்த சந்தேக நபர் கல்கிசையில் ஒரு குடியிருப்பை வாடகைக்கு எடுத்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுமியின் தாயிடம் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன எனவும் கடந்த மூன்று மாதங்களாக சந்தேக நபருடன் தொடர்புடையவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் அஜித் றோஹண தெரிவித்தார்.

அதே நேரத்தில் குறித்த சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் அஜித் றோஹண குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பில் 1,357 பேர் தடுப்பூசியைப் பெற்றார்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆயிரத்து 357 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாவது நாள் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நேற்று மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் தொற்றாளர் அதிகமாகவுள்ள பகுதி மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

கல்லடி,விபுலானந்தா வித்தியாலயத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இந்தப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இராணுவ மற்றும் சுகாதாரத்திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். நேற்று 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

# கட்சியில் அண்மையில் இணைந்தவர்களை ரணில் தவறாக வழிநடத்த கூடாது - ராஜித

கொழும்பு, ஜூன் 10

ஐக்கிய தேசியக் கட்சியில் அண்மையில் இணைந்தவர்களை ரணில் விக்கிரமசிங்க தவறாக வழிநடத்தக் கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கட்சியின் புதிய உறுப்பினர்களை தவறாகவழிநடத்த அனுமதிக்கக்கூடாது என்றும் அது சாத்தியமற்ற விடயம் என்பதால் ஐக்கிய மக்கள் சக்தியை எதிர்கொள்ள முயற்சி செய்யுமாறும் அவர் தெரிவித்தார்.

ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினராக 50 உறுப்பினர்களை எதிர்கொள்ள முடியாது என்பதால் ஒரு மூத்த அரசியல்வாதியாக ரணில் விக்கிரமசிங்க இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்வார் என நம்புகிறார் எனவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

மேலும் அவர் நாடாளுமன்றம் வருவதற்கு தாங்கள் எதிரானவர்கள் அல்லர் என குறிப்பிட்ட ராஜித சேனாரத்ன, ஐக்கிய தேசியக் கட்சியில் தோற்கடிக்கப்பட்ட உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள் என்ற ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தையும் நினைவுபடுத்தினார்.

# உயர் நீதிமன்ற நீதியரசராக அர்ஜுன ஒபயசேகர நியமனம்

## சசி மகேந்திரன் மேன்முறையீட்டு நீதியரசாகிறார்



உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக அர்ஜுன ஒபயசேகரவை நியமிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த முன்மொழிவுக்கு நாடாளுமன்ற சபை அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக கே.பி. பெர்னாண்டோவை நியமிக்கும் முன்மொழிவுக்கும் இதன்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரனை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு உயர் நீதிமன்ற நீதியரசர் எல். டி. பி. தெஹிதெனியவை நீதிச்சேவை ஆணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கவும் நாடாளுமன்ற சபை அனுமதி வழங்கியுள்ளது.

# கடந்த 3 நாள்களில் 20 லட்சம் தடுப்பூசிகளை வழங்கியது சீனா

கடந்த 3 நாள்களில் 20 லட்சம் டோஸ் கொரோனா தடுப்பூசிகள் இலங்கையை வந்தடைந்துள்ளன என இலங்கைக்கான சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

சினோபோர்ம் தடுப்பூசியின் மேலும் 10 லட்சம் டோஸ்கள் நேற்று (புதன்கிழமை)அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன.

இந்நிலையில் கடந்த இரண்டு 2 வாரங்களில் மட்டும் 2.5 மில்லியன் சினோபோர்ம் தடுப்பூசிகள் (25 லட்சம் சீன நன்கொடை) இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் இலங்கைக்கான சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

# ஒரு தொகை சினோபோர்ம் நாட்டுக்கு வந்தடைந்தது

சினோபோர்ம் தடுப்பூசியின் மேலும் ஒருதொகை நேற்று (புதன்கிழமை) காலை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இதற்கமைய 10 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசி டோஸ்கள் பீஜிங்கிலிருந்து அதிகாலை 5.02 மணியளவில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

விமான நிலையத்தை தடுப்பூசி பங்குகள் வந்தடைந்ததும் அவைபாதுகாப்புமுறையுடன்பிரதானசேமிப்புநிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மணல் கொள்ளையர்களை சுற்றிவளைத்த இராணுவம்

## டிராக்டர் சேதம்



யாழில் இராணுவத்தினர் மணல் கொள்ளையர்களை சுற்றி வளைத்த போது, கொள்ளையர்கள் தப்பிச் செல்ல முயன்ற போது டிராக்டர் சக்கரம் உடைந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்நிலையில் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சாவகச்சேரி – கச்சாய் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

கச்சாய் பகுதியில் கும்பல் ஒன்று மணல் கொள்ளையில் ஈடுபடுவதாக இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இராணுவத்தினர் அப்பகுதிக்கு விரைந்து கொளையர்களைச் சுற்றிவளைத்து கைது செய்ய முயன்றனர்.

இதன்போதுஇராணுவத்தினரைகண்டமணல்கொள்ளையர்கள் டிராக்டருடன் தப்பிச்செல்ல முற்பட்டனர். இதன்போது டிராக்டருடன் முன் சக்கரம் உடைந்து விபத்துக்குள்ளது.

இந்நிலையில் ஒருவர் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொள்ள ஏனையவர்கள் அந்த இடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

தம்மிடம் சிக்கிக்கொண்டவரைக் கைது செய்த இராணுவத்தினர் அவரை சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், விபத்துக்கு உள்ளான டிராக்டரையும் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பயணத்தடை காலத்தில் கொண்டாட்டம் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர்



பயணத்தடை அமுலிலுள்ள போது, அதனை மீறி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்கள், குழந்தையை தொட்டிலில் இடும் நிகழ்வு நடத்தியவர்கள் மற்றும் ஆலயத்தில் பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் என சுமார் 15 பேருக்கு மேல் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நிகழ்வில்கலந்துகொண்டஏனையவர்களை இனம் கண்டு அவர்களையும் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

பருத்தித்துறையில் நடைபெற்ற இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது –

கடந்த ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இருவர் தமது 50 ஆவது பிறந்தநாளை கொண்டாடி உள்ளனர். பயணத் தடைகளை மீறி அயலவர்கள், உறவினர்கள் என பலர் நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.

இது குறித்து சுகாதார பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பிறந்தநாள் கொண்டாடிய இருவரின் குடும்பங்கள் உள்ளிட்ட நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் அடையாளம் காணப்பட்ட சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த பகுதியில் குழந்தை பிறந்து 31ஆவது நிகழ்வும், குழந்தையை தொட்டிலில் இடும் நிகழ்வும் நடைபெற்றது. அந்நிகழ்வை நடத்திய குடும்பத்தினர் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் அடையாளம் காணப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை மாதனை பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் பொங்கல் நிகழ்வு நடைபெறுவதாக சுகாதாரப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஆலயத்துக்கு அவர்கள் சென்ற போது அவர்களை கண்ணுற்று ஆலயத்தில் கூடி இருந்தவர்கள் தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில் அங்கு நின்ற ஆலய தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோரை சுகாதாரப் பிரிவினர் தனிமைப்படுத்தியுள்ளனர்.

# மட்டக்களப்பில் 24 மணி நேரத்தில் கொரோனாவால் மூவர் பரிதாப சாவு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்



மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணித்தியாலங்களில் மூவர் உயிரிழந்துள்ளமையுடன், 186 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்து காங்கேயன் ஓடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும், கோறளைப்பற்று மத்தியைச் சேர்ந்த இருவர் உட்பட 3 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் கீழ் உள்ள சுகதார வைத்திய அதிகாரி பிரிவுகளான மட்டக்களப்பில் 33 பேரும், களுவாஞ்சிகுடியில் 14 பேரும், வாழைச்சேனையில் 05 பேரும், காத்தான்குடியில் 20 பேரும், கோறளைப்பற்று மத்தியில் 21பேரும், ஓட்டமாவடியில் 31 பேரும், செங்கலடியில் ஒருவரும், ஏறாவூரில் 27 பேரும் பட்டிருப்பில் 16 பேரும், வவுணதீவில் 03 பேரும், ஆரையம்பதியில் 03 பேரும், கிரானில் 03 பேரும், பொலிஸ் உத்தியோகத்தர் 03 பேரும், சிறைச்சாலையில் 07 பேர் உள்ளடங்களாக 186 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து செல்லுகின்றது. எனவே பொதுமக்கள் பயணத்தடையை மீறி வீட்டில் இருந்து தேவையின்றி வெளியே வரவேண்டாம் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## சிறுதானியங்களை விதைத்து அறுவடை செய்வதோடு மண்ணிற்கு வளமான போசணை கூறுகளை வழங்குதல்



சிறுபோக காலத்தில் மறுவயல் பயிர்களாக சிறுதானியங்களை வயல்நிலங்களில் விதைப்பதன் மூலம் சிறுதானியங்களை பெற்றுக் கொள்வதோடு வயல்நிலங்களில் நைதரசனையும் சேதன கூறுகளையும் சேர்க்க முடியும். அவரைக் குடும்பத் தாவரங்கள் வளிமண்டல நைதரசனை மண்ணில் பதிக்கும் ஆற்றல் உடையது.வளிமண்டலத்திலுள்ள 70 சதவீத நைதரசன் மண்ணில் ஒரு போகத்திற்கு ஒரு ஏக்கருக்கு கிலோ வரை பதிக்கப்படும் என ஆராய்ச்சி கூறுகிறது. அவரைக் குடும்பத் தாவரங்களாகிய உழுந்து, பயறு, கௌபீ, நிலக்கடலை போன்றவற்றை வயல் நிலங்களில் பயிரிடலாம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத் தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர்.
'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர்.
இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப் புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனி தாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன் றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் 31

**101. அமிர்தலிங்கத்தை ஒரு சின்னத் தாயகத்தின் முதல் மந்திரி(Chief Minister) என்று பிரதமர் இந்திரா காந்திவிளித்தமையில தமிழ் ஈழம் அமைக்கும் நோக்கமிருந்ததா?**

கேள்வியிலேயே 'இறைமையுள்ள சுதந்திர தமிழ் ஈழம்' என்றில்லை. பிரச்சாரங்களில் அந்த வித்தியாசத்தைத் தெளிவாக்காது எல்லா அரசியல் பிரதிநிதிகளும் (கூட்டணியினர் உட்பட) விடுதலை குழுக்களும் 'தமிழ் ஈழம் தமிழர் தாயகம்' என்றமையால் அதனைத் தெளிவான அர்த்தத்தில் புரிந்து கொள்வது கஷ்டம். அது உணர்வு சார்ந்தது.

அறிஞர் அண்ணா, முதலமைச்சராக இருந்தபோது "மதராஸ்" என்று அறியப்பட்ட Stateஐ "தமிழ் நாடு" என்று மாற்றவேண்டும் என்று எடுக்கப்பட்ட தீர்மானத்தை புதுடில்லிக்கு வைத்தபோது சில குழப்பங்களும் புரளிகளும் எழுந்தன. தி.மு.கவின் அரசியல் வரலாற்றில் "திராவிட நாடு", "தமிழ் நாடு" என்ற கோஷங்கள் முன்னிருந்ததால் தனிநாட்டுக் கோரிக்கைக் கான முன்னேற்பாடு அது என்று கருதப்பட்டது. இது குறித்து நேரடியாக அண்ணாவிடம் கேட்கப்பட்டபோது, அவர் அப்படியான எண்ணம் எங்களுக்கு இல்லை, அது எங்கள் உணர்வு, அதைப் பிரதிபலிக்கும் வகையில் நாங்கள் பெயரை மாற்ற விரும்புகிறோம். குடியமைப்பில் உள்ளவாறு தமிழ் நாடு இந்திய கூட்ட மைப்பில் உள்ள ஒரு மாகாணமாகவே தொடர்ந்தும் இயங்கும் (Indian Republic is a Union of States) என்றார். அதனை States Tamil Nadu என மாற்றுமாறு கேட்டும் அண்ணா அப்படியல்ல என்று மறுத்துவிட்டார்.

அதுபோல தமிழ் ஈழம் என்ற பதம் ஈழத்தமிழர்களின் உணர்வு. அது எந்த வடிவில் இருக்க வேண்டும் என்பது சுயாட்சியிலிருந்து கூட்டாட்சி தத்துவம் பேசி, சுதந்திர தமிழ் ஈழம் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் எல்லோரும் விரும்பியது வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ் பிரதேசங்களில் அவர்களே தமது நலன்களைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்தும் ஓர் அமைப்பே. அப்படியான ஒன்று, இந்தியாவின் திட்டங்களில் அவர்களது ஸ்ரீலங்காவிற்கான திட்டங்களில் இருந்தது. ஆனால், அமிர்தலிங்கமும் அப்போது அவருடன் புதுடில்லியில் இருந்தோரும் இந்திரா காந்தியைப் புரிந்து கொண்ட முறையில் ஜே.ஆர். எந்த இணக்கத்துக்கும் ஒத்துவராத பட்சத்தில் ஸ்ரீலங்காவின் இறைமையில் கைவைக்கும் எண்ணம் இல்லாமலிருக்கவில்லை. மடியில் கை வைப்பார் என்றே எதிர்பார்த்தார்கள்.

ஆனால் பின் நாள்களில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது இந்த முதன் மந்திரி (Chief Minister) என்பதன் அர்த்தம் விளங்கிக் கொள்ள கூடியதாக இருந்தது.

**102. அடுத்த கோடாக இந்திரா காந்தி என்ன செய்தார்?**

சர்வதேசத்தை தன் கோலங்களுக்கு ஆதரவு தருவதற்கு, அன்றில் எதிர்ப்புதராத வகையில், அனுசரித்து போக ஆவன செய்தார்.

பங்களாதேஷை உருவாக்குமுன் இந்திராகாந்தி தானே நேரடியாக சென்று சர்வதேச தலைவர்களை – முக்கிய மாக அமெரிக்கா, பிரித்தானியா மற்ற ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களை - சந்தித்து, காஷ்மீரைக் காட்டி பாகிஸ்தான் தங்களுக்குத் தொல்லைகள் தருவதை கண்டிக்குமாறும், அது கிழக்கு பாகிஸ்தானில் வங்காளிகளுக்கு இன ரீதியில் செய்யும் அட்டூழியங்களை நிறுத்தி, அங்கிருந்து கோடிக்கணக்கில் இந்தியாவின் எல்லைக்குள் வந்து தஞ்சம் கோரும் அகதிகளைத் திரும்பிப் பெற வழி வகுக்குமாறும் பிரஸ்தாபித்தார். அப்படியில்லாத பட்சத்தில் இந்தியா அவ்வளவு கோடிக்கணக்கான கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளை பராமரிக்க பணவசதி தேடுவதற்கு முடியாது, ஆகவே அவர்கள் திரும்பி போவதற்கு இந்தியா ஏதுவான நம்பகரமான வழிகளை ஏற்படுத். வேண்டியிருக்கும் என்றுரைத்தார். அந்த ஆணித்தரமான நிலைப்பாட்டினால் பங்களாதேஷ் பிறந்தது.

அதன் பிரதிபலிப்பு இதில் இருந்தது. இல்லாவிட்டாலும், அகதிகள் வந்தனர். கோடிக்கணக்கில் இல்லாவிட்டாலும் லட்சக் கணக்கில். அட்டூழியங்கள் தொடர்ந்து கொண்டிருந்தமையால் அவர்கள் திரும்பும் விருப்போ வழியோ தென்படவில்லை. பராமரிப்பும் தமிழ் நாட்டின் பட்ஜெட்டில் கணிசமான பகுதியைக் கடித்தது.

அமிர்தலிங்கத்தை வெளிநாட்டுக்குப் பிரயாணம் செய்து, இந்தியா தூதரகத்தின் ஏற்பாடுகளில் பல நாடுகளின் தலைவர்களை, முக்கியமானவர்களை சந்திக்க வைத்தார் அன்னை இந்திரா. அமிர்தலிங்கம் லண்டன் செல்ல ஏற்பாடுகளை மேற்கொண்டு, இந்திரா காந்திக்கு அறிவித்து விட்டு புறப்படுகிறார். தனது கட்சிப் பிரமுகர்களுக்கும் அங்கிருந்த தனது மகனுக்கும் அறிவித்து தன்னை விமான நிலையத்தில் சந்திக்குமாறு கேட்டார்.



அங்கு இறங்கியதும் விசேட வசதிகளின் ஊடாக இங்கிலாந்தின் இந்திய தூதுவர் அமிர்தலிங்கத்தை முதல் வரவேற்று உங்களுக்குத் தங்கு வசதிகள் ஏற்படுத்தி, சந்திக்க வேண்டியவர்களைச் சந்திக்க ஆவன செய்யுமாறு எங்கள் பிரதமர் பணித்துள்ளார், வாருங்கள், வண்டி காத்திருக்கிறது என்று அழைத்தார். அமிர்தலிங்கத்திற்கோ அன்பின் தர்மசங்கடம். தான் வந்த நாள்களில் எனது மகனுடனேயே குடும்பமாகத் தங்குவதற்கு விரும்புகிறேன், ஆனால் சந்திப்புகளுக்கு உங்களின் ஏற்பாடுகளின்படி செய்கிறேன் என்று பண்பின் நிமித்தம் அவரது காரிலேயே சென்று மகனின் வீட்டில் இறங்கினார்.

சென்ற மற்ற தலை நகர்களிலும் இந்தியத் தூதரகம் ஏற்பாடுகளைச் செய்தது. அமிர்தலிங்கம் அங்கங்கே இருந்த தமிழ்ப் பிரமுகர்களோடு இணைந்து அவர்களைச் சந்தித்து நிலைமைகளை விளங்கினார்.

அதுபோல ஆஸ்திரேலியாவிற்கு வந்தபோது, அவருடனும், நான் சார்ந்திருந்த அன்றைய இலங்கை தமிழ் சங்கத்தின் உறுப்பினர்கள் முக்கியமாக பேராசிரியர் எலியேசர் போன்றோரோடும் இணைந்து அரசியல் தலைவர்களைச் சந்தித்தோம்.

பல வருடங்களாக சில தலைவர்களைச் சந்திக்க எவ்வளவு முயற்சிகள் செய்தும் நேர காலம் ஒதுக்கி அவர்கள் முன் வந்ததில்லை. தமிழர் அங்கு பெருமளவில் குடியேறு முன்னே, 1956லிருந்து அங்கு புலம்பெயர்ந்த Burghers உம் அவர்களோடு திருமணபந்தங்களால் இணைந்த சிங்கள மக்களும் அரசியல்வாதிகளிடையே செல்வாக்கு பெற்றிருந்தனர். அவர்களுக்கு தமிழர் பிரச்சினை, பிரச்சினையாக இருந்தது. ஏன் அதை இங்கு கொண்டு வருகிறார்கள் என்ற ஏளனமும் இருந்தது. ஆனால் இந்திய தூதரகத்தின் பின்னணியில் சென்றபோது நாங்கள் முன்னர் தட்டியவர்களின் கதவுகள் எல்லாம் தாமாகவே திறந்தன.

அந்த நாள்களில் அவரையும் மங்கையர்கரசியையும் நான் அடிக்கடி சந்தித்தேன். மனம் விட்டு பலவற்றை - புதுடில்லியில் நடந்த சம்பாசணைகள் உட்பட - மேற்கொண்டு செய்ய வேண்டியவை பற்றிப் பேசினேன். அவருக்கு TRRO சன்சோனி ஆணைக்குழு சமர்ப்பித்த ஆவணத்தில் "தமிழர்கள் என்றுமே தனிநாடு கேட்கவில்லை" எனச் சொல்லப்பட்டது பற்றி திருப்தி இருக்கவில்லை. ஆனால் அது அதில் ஈடுபட்ட எல்லா புத்திஜீவிகளினதும் ஆக்கம். எனினும் நாம் அதைத் தவிர்த்திருக்கலாம் என்று ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்கள் பற்றி எல்லாம் பேசினோம். பல மாதங்களாக நான் சடுதியாக இலங்கையிலிருந்து வெளியேறும் முன்னும் பேசிக் கொள்ளவில்லை. அவற்றையும் பேசித் தீர்த்தோம்.

நான் அரசியலுக்குள் செல்ல ஆசைப்பட்டவனல்லன் அதுபோலவே, நான் சேர்ந்து இயங்கிக் கொண்டிருந்த TRRO அங்கத்தினர்கள் MIRJE இன் கந்தசாமி, Home For Human Rights சேவியர், தீபம் நிறுவனதினர், காந்தியம் டேவிட் ஐயா, டாக்டர் ராஜசுந்தரம் போன்ற யாருக்கும் அந்த விருப்பு இருக்கவில்லை. அரசிய லில் ஈடுபட்டவர்களால் 'தமிழருக்கு என்ன நன்மை விளையும்' என்பதை கொண்டே எங்களாலான உதவிகளையும் ஊக்கத்தையும் கொடுத்தோம். அமிர்தலிங்கம் மெல்போனில் இருந்தபொழுது அவருக்கு அடுத்த தினத்தில் கன்பரா சென்று வெளிநாட்டு அமைச்சரகத்தில் சந்திப்பு ஏற்பாடு இருந்தது.

அன்றிரவு தமிழ் நாட்டில் தமிழர் தகவல் நிலையத்திலிருந்து சிவநாயகம் தொலைபேசி எடுத்து, விடுதலைப் புலிகள் அறந்தலாவில் புத்த பிக்குகள், பொதுமக்களைத் தாக்கிக் கொன்று விட்டார்கள், இதில் பாரிய உயிரிழப்பு, தாங்கள் அறிந்தளவிலும், விசாரித்ததிலும் இது இராணுவத்துக்கோ பொலிஸுக்கோ எதிரான நடவடிக்கைகள் அல்ல, தெளிவாகப் பொதுமக்களுக்கு எதிரானது, அவர்களே இலக்கு வைக்கப்பட்டார்கள் என்றார்.


நாளை இது எல்லா ஊடகங்களிலும் முக்கிய இடம் பிடிக்கும், ஸ்ரீலங்கா அரசு இறந்த பிக்குகள், பொது மக்களைக் காட்டி சர்வதேச பரபரப்பை ஏற்படுத்தும், அமிருக்கு சொல்லி இதை எப்படி சமாளிப்பது என்று சிந்தித்து செயற்படுங்கோ என்று சொன்னார். நான் உறைந்து விட்டேன். ஆனாலும் நேரம் பார்க்காது அமிர்தலிங்கத்துக்கு தொலைபேசியில் விடயத்தை சொன்னேன். அவர் சொன்னதும் "கடவுளே! ரவி நான் நாளைக்கு என்ன சொல்வது? அந்த நேரமென்றாலும் என்னை உடனடியாக வந்து சந்திப்பீரா?" - என்று கேட்டார். மறுக்காமல் போனேன். அவரது முகம் பேயறைந்த மாதிரி இருந்தது. நாளைய சந்திப்பை பின்போடுவோமா என்பதுதான் முதற்கேள்வி.

காலைக்கதிர் Kalaikkathir



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

வே.வரதசுந்தரம்



**கொடியது கேட்கின் வரிவடிவேலோய்**
**கொடிது! கொடிது! வறுமை கொடிது!**
**அதனினும் கொடிது இளமையில் வறுமை!**

இது ஔவைப் பிராட்டியின் யதார்த்தமான கூற்று. இதனாலன்றோ எங்கள் பகவான் பாபா பின்வருமாறு போதித்தார்:–

'எந்தன் நாமங்களை உச்சரிக்கும் உதடுக ளிலும் பார்க்க மக்களுக்குச் சேவையாற்றும், துன்புறும் மக்களைத் தேடிச்சென்று உதவும் கரங்கள் புனிதமானவை'

2018 ஆம் ஆண்டில் சாயி இளைஞர் தேசியமாநாடு ஹற்றன் ஸ்ரீபாத ஆசிரியர் பயிற் சிக் கல்லூரியில் நடைபெற்றவேளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழ்நாட்டு சாயி அன்பர் வெ.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சிறப்புரையின் தொனிப்பொருளாக ஔவை யாரின் கூற்றும் பகவானின் போதனையும் விளங்கியது. அன்னாரின் சிறப்புரையைப் பார்ப்போமா!

'குடும்ப வறுமை காரணமாக பள்ளிசென்று படிப்பைத் தொடரவேண்டிய சிறுவர்கள் தெரு வோரங்களில், ஹோட்டல்களில் தொழில்செய் வது காணும்போது ஔவைப்பாட்டியின் கூற்றின் வலியை உணரலாம். சில சிறார்கள் ஒருவேளை உணவுகூடக் கிடைக்காது அல்லற்படுவர். அத்தகையோரின் அவலம் போக்கவே பகவான் பாபா நாராயணசேவையை ஆரம்பித்தார். பாபா அந்தச் சேவைக்கு 'ஏழைகளுக்கு உணவிடல்' என்றோ 'பிச்சைக்காரருக்கு உணவிடல்' என்றோ அழைக்கவில்லை. அவர்களிடத்தும் நாராயணர்கள் உண்டென்பதால் அதனை 'நாராயண சேவை' என்று பாபா அழைத்தார்.



திருகோணமலை சத்தியசாயி அன்பர்கள் ஈச்சிலம்பற்று கிராமத்தில் அமைந்துள்ள இடைத்தங்கள் கொவிட் - 19 சிகிச்சை நிலையத்தில் மருத்துவ அதிகாரிகளிடம் தொற்றாளர்களுக்கான நிவாரணம் வழங்கல்.

1975 ஆம் ஆண்டில் தந்தையார் பகவான்பாபா படத்தை எங்கள் வீட்டுச்சுவரில் மாட்டினார். அப்பாவுடன் நாங்களும் இணைந்து பஜனை பாடு வோம். படத்திலிருந்து விபூதிசொரியும். ஆனால், எங்கள் வீட்டில் இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஒரு நாள் காலை தந்தையார் வியர்வையும், நெஞ்சு வலியும் ஏற்பட்டு மரணமடைந்தார். வீட்டுக்கு வரு வோர் சுவாமி அப்பாவைக் காப்பாற்றவில்லை யென்று குற்றம் சுமத்துவர். நான் சிறுவயதிலே எனது தந்தையை இழந்துவிட்டேன். எனக்கு இரண்டு தங்கைகள், ஒரு தம்பி. வீட்டில் மொத்தம் ஐந்துபேர்.

எங்கள வீட்டில் தினமும் நீர்மோர்தான் சாப்பாடு. சோறுவடித்து, உப்புப்போட்டு, காலை, மதியம், இரவு என்று மூன்று வேளையும் நீர்மோர்தான். எப்போதா வது ஒருநாள் தெருவில் காய்கறி விற்கும் பெண் மணி எம்மீது பரிதாபப்பட்டு இரண்டு கீரைக்கட்டுகள் குறைந்த விலைக்குத் தந்துதவுவார். அதனை அம்மா சமைத்துத் தர, அது நமக்கு தீபாவளி விருந் தாக அமையும். அம்மா கீரைக்கறியைத் தனக்கு வைத்துக் கொள்ளாமல் நான்காகப் பிரித்து எமக்குக் கொடுத்துவிட்டுத் தான் நீர்மோர் அருந்துவார். விரக்தியடைந்த அம்மா பகவானின் படத்தைக் குப்பைத் தொட்டியில் எறியச் சொன்னார். எப்படி யெறிவது? நான் சாயி நிலையத் தலைவரிடம் அத னைக் கொடுக்கச் சென்றேன். அவரது கண்களி லிருந்து நீர் வழிந்தது. அவர் 'சுவாமி உன்னைக் கண்டிப்பாகக் காப்பாற்றுவார்' என்றார்.

பாலவிகாஷ் வகுப்புக்குச் செல்வதை நிறுத்தி விட்டுக் கடையில் போய் வேலை செய் தேன். நாளொன் றுக்கு ஒரு ரூபாயும், இரண்டு குவளை தேநீரும்கிடைக்கும். நான் பாலவிகாஷ் செல்லவில்லை என்பதால் பால விகாஷ் குரு ஜெய ஸ்ரீ என்னை நிலை யத் தலைவரிடம் அழைத்துச் சென் றார். நான் வகுப் புக்கு வரமாட்டேன் என்று உறுதியாகக் கூறியமையை ஆமோதித்த தலைவர், 'பாபா தைமாதம் சென்னை வருகிறார். சுவாமியை ஏன் சும்மா விடுகிறாய்? ஏன் அப்பாவைக் காப்பாற்றவில்லை என்று கேள்' என்றார். பாலவிகாஷ் வகுப்புகளுக்குச் சென்றேன்.

பாபா 1986 இல் சென்னை வந்தபோது, அவருக்கு அவரது அறையில் சேவையாற்ற வாய்ப்புக் கிடைத்தது. அவ்வேளை பாபா, 'அப்பாவுக்கு என்னநடந்தது? நீ கவலைப்படாதே. நான்தான் இனி மேல் உன் அப்பா. நீ புட்டபர்த்தி யில் எம்.பி.ஏ. படிக்கவேண்டும். 1988 இல் அங்குவந்து படிப்பைத் தொடர்வாய்.' – என்றார். அப்படியே என் வாழ்வில் நடந்தது. அம்மா வின் தியாகத்தைப் பார்த்து வளர்ந்த, கொடியதான இளமை யில் வறுமையை அனுபவித்த இந்த கிருஷ்ணமூர்த்தி இன்று எம்.பி.ஏ. பட்டம்பெற்று ஒரு நிறு வனத்தின் முகாமையாளராகக் கட மையாற்றுகிறேன் என்றால் அதற் குக் காரணம் பாலவிகாஷ் படிப்பு, செயற்பாடு. பகவான் பாபா என் னிடம் காட்டிய பரிவு.

ஒருவேளை எனக்கு பகவான் பாபா அருளும், பாலவிகாஷ் படிப்பு வாய்ப்பும் கிட்டியிருக்காவிட்டால், என்ன நடந்திருக்கும்? நீங்கள் கசாப் என்ற தீவிரவாதி பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவனுடைய நிலைமையும், என்னுடைய நிலைமையும் ஆரம் பத்தில் ஒன்றுதான். அதாவது, இளமையில் வறுமை. பசியை அடக்கமுடியாது. எனக்கன்று பாலவிகாஷ் கிடைத்தது. கசாப்புக்கு அப்படி வாய்ப்புக் கிடைக்கவில்லை. தீவிரவாதிகள் அந் தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உணவு, உடை கொடுத்து அவனிடத்து இந்தியா மீது வெறுப் பைத் தூண்டினர். அவன் வாழ்க்கை பலியா னது.

ஆனால் பாலவிகாஷ் சென்றதால், அன்பு, அருள் பற்றி இளமையிலேயே போதனை கிட்டி யதால், பகவான்பாபா திருவருள் கிட்டியதால், எனக்கு இவ்வாழ்க்கை கிட்டியது. ஆகவே பாபா அடியார்கள் பின்வருமாறு உறுதியுரை எடுத்து பணிகளாற்ற வேண்டும்.

'ஏழைச்சிறுவர்களின் மேம்பாட்டுக்காகப் பாடுபடுவோம். அவர்களிடத்து அன்பைப் பொழி வோம். அவர்கள் நல்லவர்களாக உருவாக பாபா காட்டிய பாதையில் யாம் சேவை ஆற்றுவோம்' – என்றார்.

இதனைத் தொடர்ந்து, பிரசாந்தி நிலையம் வந்த சாயிஅடியார்கள் பாலவிகாஷ் கல்வித் திட் டம்பற்றி சிந்திக்கின்றனர். சிறுவர்களுக்கு உயரிய விழுமியங்களை படிப்பு மற்றும் செயற்பாடுகள் ஊடாக ஊட்டி, நல்ல குடிமக்களை உருவாக்க வேண்டி பகவான் பாபா 1969 ஆம் ஆண்டில் பாலவிகாஷ் கல்வித்திட்டத்தினை ஆரம்பித்தார். சிறுவர்கள் நல்லொழுக்கம் உள்ள குடிமக்களாக மலர்வதே அவர் நோக்கம். பாலவிகாஷ் கல்வித் திட் டத்தின் நோக்கம் காணீர்:–

'நல்ல, தூய மனச்சாட்சியுடைய பிள்ளைகளை உருவாக்கல். சாதாரண, நல்வாழ்க்கை மூலம் அவர் களை ஆன்மீக மேம்பாட்டுக்கு வழிநடத்தல். கடமை, கொள்கை, அர்ப்பணம் என்னும் நல்லியல்பு களை ஊட்டல். அன்பு, சேவை ஆகிய துறைகளில் அவர்களை ஊக்குவித்தல். அனைத்து மானுடர் களிடத்தும் உறைந்துள்ள தெய்வீகத்தைப் பேணி, சமூகசேவை ஆற்றும் இளைஞர் சமுதாயத்தை உருவாக்கல்'

பகவான் பாபா பணித்த மக்கள் சேவையை சிந் திக்கும்போது, திருகோணமலை சத்தியசாயி நிலை யத்தினர் அறுபதுமைல் தொலைவிலுள்ள ஈச்சிலம் பற்று கிராமத்தில் அமைந்துள்ள இடைத்தங்கள் கொவிட் - 19 சிகிச்சை நிலையம் சென்று நிர்வாகத்தி னர் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து ஆயிரம் முகக்கவசங்கள், 150 போத்தல் தண்ணீர் வழங்கிய மையையும், சாயிநிலையம் தத்தெடுத்துள்ள திரு கோணமலை நகரிலிருந்து எண்பதுமைல் தொலை வில் வெருகல் பிரதேசத்திலுள்ள உப்பூரல், சீனவெளி கிராமங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கொடுத்துள்ளமையும் தருணமறிந்து காலத்தினாற் செய்த உதவியெனப் பாராட்டுகிறோம். காலத்தினாற் செய்த உதவியன்றோ!



திருகோணமலை சாயி நிலையம் தத்தெடுத்துள்ள உப்பூரல், சீனவெளி கிராமங்களுக்குச் சென்று சாயி அன்பர்கள் நிவாரணம் வழங்கல்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 08** **காந்தம்** **விஞ்ஞானம் அலகு 06**

⁎ காந்தம் சில பொருட்களையே கவரக்கூடியது.
⁎ காந்தமானது சில உலோகங்கள், கலப்புலோகங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி ஆக்கப்படுகின்றது.

1.காந்த திரவியங்கள் என்றால் என்ன?

.............................................................................................................

2.காந்த திரவியங்கள் ஆக்கப்படும் உலோகங்கள் எவை?

.............................................................................................................

3.காந்த திரவியங்கள்; ஆக்கப்படும் கலப்புலோகங்கள் எவை?

.............................................................................................................


4.காந்தங்கள் எவற்றால் ஆக்கப்படுகின்றது?

.............................................................................................................


5.வலிமையான காந்தங்களின் உற்பத்திக்கு பயன்படும் உலோகங்கள் எவை?

.............................................................................................................

6.பின்வரும் காந்தங்களை இனங்காண்க?

.......................... .......................... ..........................

.................... .................... .................... ....................

**7.காந்த முனைவுகள்**
⁎ காந்தத்தின் எல்லாப் பக்கங்களும் ஒரே அளவான கவர்ச்சியை கொண்டிராது.
⁎ படத்தில் காட்டியவாறு கவர்ச்சி மாறுபடும்



1.காந்த முனைவுகள் என்றால் என்ன?

.............................................................................................................

2.காந்தத்தின் பிரதான இரு முனைவுகள் எவை?

.............................................................................................................

3.முனைவுகள் குறிப்பிடப்படாத காந்தங்களை இனங்காணும் 4 வழிகளை குறிப்பிடுக?

.............................................................................................................

**8.காந்தமொன்றின் காந்தப்புலம்**
⁎ காந்தப்புலமானது ஒரு குறித்த திசையிலேயே காணப்படும்.

1.காந்தப்புலம் என்றால் என்ன?

.............................................................................................................

2.காந்தவிசைக் கோடுகள் என்றால் என்ன?

.............................................................................................................

3.கீழுள்ள காந்தங்களின் காந்த விசைக்கோடுகளை வரைக?



Figure 1

**9. திசைகாட்டி**
⁎ திசைகளை கண்டறிய திசைகாட்டி பயன்படுகிறது.



1.திசைகாட்டியை முதலில் கண்டுபிடித்தவர்கள் யார்?

.............................................................................................................

2.திசைகாட்டியில் காணப்படும் சட்டக்காந்தத்திற்கு ஒப்பான திரவம் அல்லது காந்த முனை ஒன்றின் மீது சுயாதீனமாக அமையவல்ல அமைப்பு எது?

.............................................................................................................

3.திசையறிகருவி பயன்படும் சந்தர்ப்பங்கள் 3தருக?

.............................................................................................................

**10.புவிகாந்தம்**
⁎ புவியின் உள்ளக அகணியின் அதிக வெப்பம் காரணமாக புவியில் காணப்படும் உலோகங்கள் உருகி திரவநிலைக்குள்ளாவதால் புவி சுழற்சியடையும் போது அத்திரவ உலோகங்கள் சுழற்சி அடைவதன் காரணமாக மின்னோட்டம் ஏற்படுகிறது, இதன் காரணமாக புவிக் காந்தப் புலம் தோன்றுகிறது.


1.புவிகாந்தம் எனப்படுவது யாது?

.............................................................................................................

2.புவிகாந்தப்புலம் எவ்வாறு தோன்றும்?

.............................................................................................................

3.உண்மை வடக்கு, காந்த வடக்கு என்பவற்றை படத்தில் குறித்துக்காட்டுக?



**11.தற்காலிக காந்தமும் நிலையான காந்தமும்**
⁎ காந்தத் திரவியங்களுக்கு காந்த வலிமையை வழங்குவதனூடாக காந்தங்களினை உருவாக்க முடியும்.
காந்த வலிமையைக் கொண்டிருக்கும் கால அளவை அடிப்படையாகக் கொண்டு காந்தங்களை இரு பிரதான வகைகளாக வகைப்படுத்தலாம்.
1.காந்தங்களின் இரு பிரதான வகைகளும் எவை?

.............................................................................................................

2.மின்காந்தம் என்பதனால் கருதப்படுவது யாது?

.............................................................................................................

3.மின்காந்தமானது தற்காலிகமான காந்தம் எனக்குறிப்பிடுவது ஏன்?

.............................................................................................................

4.சட்டக்காந்தமானது நிலையான காந்தம் எனக் குறிப்பிடப்படுவதற்கான காரணம் யாது?

.............................................................................................................

**12.நிலையான காந்தம்**
1.மின்காந்தங்களை ஆக்கப்பயன்படும் காந்ததிரவியம் யாது?
.............................................................................................................

2.அக் காந்ததிரவியம் பயன்படுத்தக் காரணம் யாது?

.............................................................................................................

3.நிலையான காந்தங்களை உருவாக்கப் பயன்படும் காந்ததிரவியங்கள் எவை?

.............................................................................................................

4.மிகவும் வலிமையாக உருவாக்கப்பயன்படும் காந்ததிரவியம் எவை?

.............................................................................................................

5.காந்தவலிமை குறைவடைவதற்கான காரணம் 4 தருக?

.............................................................................................................

**13.நிலையான காந்தத்தைக் களஞ்சியப்படுத்தல்**
⁎ நிலையான காந்தத்தினை அதன் காந்தப் புலம் பரவிச் செல்லாதவாறு களஞ்சியப்படுத்துவதனூடாக நீண்டகாலம் காந்தத்தன்மையைப் பேணலாம்.
1.காந்த தன்மையை நீண்ட காலத்துக்கு எவ்வாறு பாதுகாக்கலாம்?

.............................................................................................................

2.கீழுள்ள படம் மூலம் காட்டுவது யாது?

.............................................................................................................

**14.நிலையான காந்தங்களைப் பயன்படுத்தல்**
⁎ அன்றாட வாழ்வில் காந்தம் பல்வேறு உபகரணங்களிலும் செயற்பாடுகளிலும் பயன்படுகிறது.
1.நிலையான காந்தங்கள் பயன்படும் சந்தர்ப்பங்களை குறிப்பிடுக?

.............................................................................................................

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யா/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர்**
**யா/தேசிய கல்வியியற்கல்லூரி**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

# செல்வாக்குடையோர்க்கு வசதியாக அரசின் பயணத் தடை அமைகிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் காட்டம்



செல்வாக்குமிக்கவர்கள் பயணத்தடைக் காலத்திலும் தமக்குத் தேவையான கருமங்களை ஆற்றுகின்றனர். ஆனால், அப்பாவி மக்கள் உண்ண உணவின்றி பரிதவிக்கின்றனர்.

– இவ்வாறு நாடாளுமன்றில் காட்டத்துடன் தெரிவித்தார் யாழ்.மாவட்ட உறுப்பினர் சி.சிறிதரன்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் –

கொரோனா எனும் கொள்ளை நோயால் நாடு மிகப் பெரிய அதளபாதாளத்தில் செல்கிறது. இன்னொரு பக்கம் மண்சரிவு, மழைவெள்ளத்தால் மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானோர் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து இருக்கிறார்கள்.

இன்னொருபுறம் நாட்டு மக்கள் முடக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான உதவிகள் உதவிகள் ஏதும் செய்யப்படாமலேயே முடக்கப்பட்டுள்ளார்கள். இது ஓர் ஆபத்தான விடயம். நாடு முழுவதும் பயணத்தடை என்ற புதிய சொல் பயன்படுத்தப்படுகிறது. இது ஊரடங்குமல்ல லொக்டவுணுமல்ல. ஆனால் இந்த நாட்டில் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

செல்வாக்கானவர்கள் பயணிக்கும் வகையில் பயணத்தடை அமைந்துள்ளது. அப்பாவி மக்கள் நாளாந்தம்உணவுத்தேவையைதேடமுடியாதுள்ளனர். அவர்களுக்கான கொடுப்பனவு சரியாக வழங்கப்படவில்லை. 5 ஆயிரம் ரூபா பணம் கொடுப்பதாக அரசாங்கம் சொல்கிறது. ஆனால் அந்த 5,000 ரூபாவிலோ 3,000 ரூபா சமுர்த்தி நிவாரணம் பெறுபவராக இருந்தால் அவரது 3,000 ரூபா கொடுப்பனவு அளிக்கப்பட்டு மேலதிகமாக அரசாங்கம் 2,000 ரூபர் வழங்குகிறது. இப்போது பாருங்கள் அரசாங்கம் 2,000 ரூபாகொடுக்கிறதா 5,000 ரூபா கொடுக்கிறதா என்பதை நீங்களே தீர்மானியுங்கள்.சமுர்த்திப் பணத்தை நம்பி கடைகளில் கடன் வாங்கிய அப்பாவி மக்கள் சீவிக்க முடியாமல் மாற்றப்பட்டுள்ளனர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் நிலையிலுள்ளனர்.ஆனாலும் அமைச்சர்கள் 30 ஆண்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்த தமக்கு கொரோனா பெரிதல்ல என இப்போதும் வார்த்தை ஜாலங்களில் விளையாடுகின்றனர். கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்பே வைத்திய அதிகாரிகள் சங்கம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம், அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள் நாட்டை முடக்குமாறு வலியுறுத்திய போது அரசாங்கம் அதனை காதில் விழுத்திக் கொள்ளவில்லை.

தற்போது 7ஆம் திகதி வரை 14 ஆம் திகதி வரை 21ஆம் திகதி வரை 30 ஆம் திகதி வரையென நாள்களை மாதக்கணக்கில் நீட்டிக் கொண்டு செல்கின்றனர். மக்கள் வாழ்வு அவலமாகியுள்ளது.

தடுப்பூசி வழங்குவதும் அரசியல் மாயமாகியுள்ளது. பலர் அரசியல் ரீதியாக சென்று தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்குகின்றனர். சுகாதாரத்துறை செய்ய வேண்டிய வேலையை ஏன் அரசியல்வாதிகள் செய்ய வேண்டும் ? ஏன் இராணுவத்தினர் செய்யவேண்டும்? சுகாதாரம் என்பது சுகாதாரப் பரிசோதகர்கள் வைத்தியத் துறைசார்ந்தவர்களின் பணியாகும். அவர்கள் முடக்கப்பட்டு பேசமுடியாது செய்யப்பட்டுள்ளனர்.

எந்த நாட்டிலும் இல்லாத முன்னுதாரணம் இதுவாகும். மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது .

இன்று ஒரு செய்தியைப் பார்த்தேன். ஓய்வூதிய பணத்தை பெறுபவர்களை இராணுவத்தினர் அழைத்துச் சென்று வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தன்னுடைய ஓய்வூதிய பணத்தை தான் வெளியே சென்று பெறமுடியவில்லை. அதற்கும் இராணுவம் அப்படி என்றால் இராணுவ ஆட்சி நடக்கிறது என்பதை சொல்ல முடியுமா?

வங்கிகளில் கடன் பெற்றவர்களின் பிரச்சினை சொல்லில் அடங்காதவை. யாழ்ப்பாணத்தில் வாகனத்தை லீசிங் மூலம் பெற்றவர் அதனை கட்ட முடியாமல் தூக்குப் போட்டு தற்கொலை செய்துள்ளார் அவ்வளவு தூரம் நிதிக் கம்பனிகள் பயணத்தடை முடக்கத்தையும் கருத்தில் எடுக்காமல் ஏழைகளின் உயிரைப் பறிக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் தோற்றுப் போன நிலையில் தன்னுடைய கொள்கைகளை நடைமுறைப்படுத்த முடியாமல் மக்களை கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்கிறது. – என்றார்.

# உன்னதமான ஊடக சுதந்திரத்துக்கு உயிர்கொடுத்த ஊடகவியலாளர்கள் மூன்றாம் தரப் பிரஜைகள் அல்லர்

## யாழ்.ஊடக அமையம் கண்டனம்

உன்னதமான ஊடக சுதந்திரத்திற்காக உயிர் கொடுத்த ஊடகவியலாளர்களை மூன்றாம் தரத்தில் பணிபுரிந்த ஊடகவியலாளர்கள் என சுகாதார அமைச்சின் ஊடக செய்தித் தொடர்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் வெளியிட்டுள்ள கருத்துக்கு யாழ்.ஊடக அமையம் வன்மையான கண்டனங்களை பதிவு செய்துகொள்கின்றது.–

இது தொடர்பில் யாழ். ஊடக அமையம் வழங்கிய கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கையில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர் கீழ் தரமாக பணியாற்றிய ஊடகவியலாளர்கள் என சுகாதார அமைச்சின் பிரதிநிதியான மருத்துவர் ஹேமந்த ஹேரத் கருத்து வெளியிட்டுள்ளமை அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது.

தாம் சார்ந்த மக்களுக்காக வடக்குக் கிழக்கிலும் கொழும்பிலுமாக 39 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டோ அல்லது காணாமலோ கடந்த காலங்களில் ஆக்கப்பட்டுள்ளனர்.

கூலிக்காக மாரடிக்கும் மருத்துவர் ஹேமந்த ஹேரத் போன்றவர்களைத் தாண்டி உன்னதமான ஊடக சுதந்திரத்துக்காக களப்பலியான ஊடகவியலாளர்களை அவமானப்படுத்தும் மற்றும் நிந்திக்கும் விதத்தில் கருத்துக்களை எவரும் முன்வைக்க அருகதையற்றவர்களென யாழ். ஊடக அமையம் கருதுகின்றது.

ஊடகவியலாளர்கள்மீதுகட்டவிழ்த்துவிடப்பட்ட கொலைகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமைக்கு இன்று வரை நீதி கிடைக்காமைக்கு பிரதான காரணமாக அமைவது ஆட்சியாளர்களுக்கு வளைந்து கொடுக்காமையும், நீதி விசாரணை தொடர்பில் முன்னிறுத்த பின்னடிப்பதுமேயாகும்.

கடந்த ஜூன் 3 ஆம் திகதி சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நிகழ்ந்த செய்தியாளர் மாநாட்டைத் தொடர்ந்து, சுகாதார அமைச்சின் ஊடக செய்தித் தொடர்பாளர் என்ற ரீதியில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பாக தெரிவித்த கருத்து ஊடக சமூகத்தின் மத்தியில் மிக்க சீற்றத்தை தோற்றுவித்துள்ளது.

உன்னதமான ஊடக சுதந்திரத்துக்காக களப்பலியான ஊடக நண்பர்களுக்கு நீதி கோரி யாழ்.ஊடக அமையம் சமரசமின்றி நீண்டகாலமாக போராடிவருகின்றது.

இந்நிலையில் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்த கருத்துக்கள் எம்மையும், பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பத்தினரையும் ஆழ்ந்த வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

அரசின் ஒரு பொறுப்பான அதிகாரியாகத் தெரிவித்த கருத்து அரசினது கருத்தாகவே கருதப்படுவதால் இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடமும்,ஊடக சமூகத்தினரிடமும் பொறுப்பு கூறவேண்டியவராக மருத்துவர் ஹேமந்த ஹேரத் உள்ளார் என்பதை யாழ்.ஊடக அமையம் சுட்டிக்காட்டவிரும்புகின்றது. – என்றுள்ளது.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து; சூழல் பாதிப்பு மதிப்பீடுகள் ஆரம்பம்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கு உள்ளான காரணத்தால் ஏற்பட்டுள்ள சூழல் பாதிப்பு தொடர்பில் மதிப்பிடும் நடவடிக்கைகள் தற்போதைய நிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சில பிரிவுகள் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன என அதன் தலைவர் சட்டத்தரணி தர்ஷினி லஹந்தபுர தெரிவித்தார்.

இதில் அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் மதிப்பீட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்கு சில காலம் செல்லும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்துரையாடினேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சப்புகஸ்கந்தவில் எரிபொருள் நீருடன் கலப்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கல்



சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் நீருடன் சேர்ந்ததால், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு நேற்று (புதன்கிழமை) முதல் இழப்பீடு வழங்கப்படுகின்றது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், சக்தி வலு அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல, அமைச்சரவை இணை பேச்சாளரும், அமைச்சருமான கலாநிதி ரமேஷ் பத்திரண அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க ஆகியோரும் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலைய பகுதியில் வெள்ளம் ஏற்பட்டதால் சுத்திகரிப்பு நிலையம் அமைந்திருந்த பகுதி நீரில் மூழ்கியது.

இதனால் அந்த பகுதியில் தண்ணீரில் எரிபொருள் கசிவு ஏற்பட்டது என தெரிவித்தார்.

இந்த சுத்திகரிப்பு நிலையம் 1,960 இல் இருந்து நிலத்தடி சுத்திகரிப்பு நிலையமாக உள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக சக்தி வலு அமைச்சர் என்ற வகையில் நான் இரண்டு குழுக்களை நியமித்துள்ளேன். சக்தி வலு அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் உபுல் விஜசேகர தலைமையிலான குழுவொன்று இந்த சம்பவத்தின் உண்மையான காரணம் தொடர்பாக ஆராயும், இது அதிகாரிகளின் தவறு காரணமாக ஏற்பட்டதா என்பது பற்றியும், இது போன்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறுவதைத் தடுக்க என்ன வழிமுறைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி ஆராய உள்ளதாகவும் அமைச்சர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# எம்.பியாகின்றார் ஞானசார தேரர்?



அபே ஜனபல கட்சியின் நாடாளுமன்ற ஆசனத்துக்கு பொதுபலசேனா அமைப்பின் தலைவர் ஞானசார தேரரை நியமிக்கும் திட்டம்இருக்கின்றதுஎனஅக்கட்சிதெரிவித்துள்ளது.

அபே ஜனபல கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியலில் அத்துரலிய ரத்ன தேரர் நாடாளுமன்றம் சென்றுள்ள நிலையில், ஒப்பந்தத்தின் படி அவரது பதவிக் காலம் ஜூலை மாதம் 5 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது என அபே ஜனபல கட்சி குறிப்பிட்டுள்ளது.


பொதுத் தேர்தலில் அபே ஜனபல கட்சிக்கு ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற ஆசனம் கிடைத்ததைத் தொடர்ந்து, யாரைப் நாடாளுமன்றம் அனுப்புவது என்ற உட்கட்சி முரண்பாடு ஏற்பட்டது.

இறுதியில், அத்துரலியேரத்ன தேரர் 6 மாதங்களுக்கு நாடாளுமன்றம் செல்வதற்கு இணக்கம் காணப்பட்டது.

அத்துரலியே ரத்ன தேரருக்கு வழங்கப்பட்ட 6 மாத காலம் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதியுடன் நிறைவடைவதைத் தொடர்ந்து, ஞானசார தேரர்நாடாளுமன்றம்செல்லவுள்ளார் என்று அபே ஜனபல கட்சி தெரிவித்துள்ளது.

ஞானசார தேரரின் பெயரைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முன்மொழியநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் கைது!



யாழ்., காரைநகர் பகுதியில் வீடொன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காரைநகர் ஊரி பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தி நடைபெறுகின்றது என அப்பகுதி கிராம சேவையாளருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த வீடு முற்றுகையிடப்பட்டது.

அதன்போது வீட்டின் அறை ஒன்றினுள் கசிப்பு உற்பத்தி இடம்பெற்றதைக் கண்டறிந்து, வீட்டில் இருந்தவரை ஊர்காவற்துறைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

அத்துடன் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# யாழில் கொரோனாவுக்கு முடிவுகட்ட அனைவரும் ஒத்துழைப்பு வழங்குக

## மாவட்ட அரச அதிபர் மகேசன் வேண்டுகோள்

(இ.கலையமுதன்)



**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.**

**நாடு முழுவதிலும் பயணத் தடை அமுலில் உள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் விவசாய விளைப் பொருள்களைச் சந்தைப்படுத்தல் தொடர்பில் நேற்று முக்கிய கூட்டம் நடைபெற்றது. யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதன்பின்னர் யாழ்ப்பாணத்தின் நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

இதேவேளை, மேற்படி கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன என்று மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்ட விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் விற்பனை செய்யப்பட்டு எஞ்சியுள்ள விவசாய உற்பத்திப் பொருள்களை மாகாணத்துக்கு வெளியே அல்லது வடக்கு மாகாணத்துக்குட்பட்ட மாவட்டங்களில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு எவ்வாறு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் அல்லது மொத்த வியாபாரிகளிடம் எவ்வாறு அதனைச் சேர்ப்பித்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

விவசாய உற்பத்திப் பொருட்களை அதிக அளவில் கொண்டுள்ள விவசாயிகளை எவ்வாறு மொத்த வியாபாரிகளுடன் இணைப்பது தொடர்பில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது குறித்து ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் 'நஞ்சற்ற விவசாயத்தை ஊக்குவிப்போம்' என்ற எண்ணக்கருவுக்கு அமைய சேதனப்பசளை மூலம் மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை எவ்வாறு மேம்படுத்துவது மற்றும் சேதனப் பசளை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கக் கையாள வேண்டிய உத்திகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

இன்றைய கூட்டத்தின்போது ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற விரும்பும் விவசாயிகள் வடக்கு மாகாண விவசாய உதவிப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது - என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாகாண உதவி விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தனர்.

# கொரோனா ஒழிப்பில் இராணுவத்தினர் செயற்பட்டால் இங்கு மக்கள் அழிவதை எவராலும் தடுக்கவே முடியாது

## கூட்டமைப்பின் எம்.பி. சார்ள்ஸ் இடித்துரைப்பு



இலங்கையில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் செயற்பட்டால் மக்கள் அழிவதை யாராலும் தடுக்க முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அரசின் பயணத் தடையால் கிடைத்த பலன் என்னவெனில், மக்களைப் பாதாளத்தில் தள்ளியது மட்டுமே என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தடுப்பூசிகள் மூலம் மேற்குலக நாடுகள் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தியுள்ளன. ஆனால், இலங்கையால் இந்தக் கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய முடியாமைக்கு அரசின் இராஜதந்திர கொள்கையின் பலவீனமே காரணமாகவுள்ளது.

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டனை எதிர்த்து சீனாவின் பக்கம் இலங்கை நிற்பதால் கொரோனாத் தடுப்பூசிகளை இந்த நாடுகள் இலங்கைக்கு வழங்கப் பின்னடிக்கின்றன. முதலில் தடுப்பூசிகளை வழங்கிய இந்தியா தற்போது வழங்க மறுத்துவிட்டது.

கொழும்புத் துறைமுகக் கடல் பரப்பில் கப்பல் ஒன்று தீப்பிடித்து எரிந்த போது இலங்கை இந்தியாவின் உதவியைக் கேட்டது. ஆனால், இந்தியா முழு மனதுடன் உதவவில்லை. இந்தியா நினைத்திருந்தால் அந்தக் கப்பலின் தீயைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் தவறே இந்தியா இவ்வாறு வேண்டா வெறுப்பாக செயற்படக் காரணம் - என்றார்.

# மிருசுவிலில் கோவிலை இடித்தோரை சட்டத்தின் முன் உடன் நிறுத்துங்கள்!

## ஆறு.திருமுருகன் வலியுறுத்தல்

மிருசுவில் பிள்ளையார் கோவிலை இடித்தவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுங்கள் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

சைவமக்களின்வழிபாட்டுத்தலங்களை அழிக்க முற்படும் அநாகரீக செயற்பாடு வேதனை தருகிறது. மிருசுவிலில் மிக நீண்ட காலமாக மக்கள் வழிபாடு செய்த பிள்ளையார் கோவில் அடித்து நொருக்கப்பட்டுள்ளமை மிக வேதனைதரும் செய்தியாகும். இவ்விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் அவர்களையும், வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சைவ மக்கள் சார்பில் வேண்டுகிறேன்.

சமீபகாலமாக மன்னார் மாவட்டத்தில் பல சைவக் கோவில் விக்கிரகங்களை உடைத்து சைவமக்களை வேதனைப்படுத்தும் சம்பவம் தொடர்ந்துகொண்டிருக்கிறது. இந்நிலையில் மிருசுவில் ஆலயம் அழிக்கப்பட்டுள்ளமை திட்டமிட்டுத் தொடரும் நிகழ்வாகவே கருத வேண்டியுள்ளது.

இந்நாட்டில் சுதேசிகளின் புராதன சமயமாக விளங்கும் சைவசமயத்துக்கு தீங்கிழைப்பவர்களை உடன் நடவடிக்கை எடுத்து, சட்டத்தின் முன் தண்டிக்கவேண்டியது பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமையாகும். – என்றுஉள்ளது.